செய்தி வெளியீடு எண்:334 நாள் : 11.07.2016

# செய்தி வெளியீடு

தமிழக அரசின் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறையின் கீழ் 85 அரசு தொழிற்பயிற்சி நிலையங்கள், 22 அரசு உதவி பெறும் தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள், 461 தனியார் தொழிற்பயிற்சி நிலையங்கள் மற்றும் 22 அடிப்படை பயிற்சி மையங்கள் செயல்படுகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் பிட்டர், எலக்ட்ரீசியன், ஒயர்மேன், மோட்டார் மெக்கானிக் போன்ற பொறியியல் தொழிற்பிரிவுகளிலும், கம்ப்யூட்டர் ஆப்பரேட்டர், டெய்லர் போன்ற பொறியியல் அல்லாத தொழிற்பிரிவுகளிலும் பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. இத்தொழிற்பயிற்சி நிலையங்களில் ஒவ்வொரு வருடமும் ஜீலை மாதம் 8ஆம் வகுப்பு மற்றும் 10ஆம் வகுப்பு தேர்ச்சி பெற்ற சுமார் 30,000 மாணவர்கள் சேர்க்கப்படுகின்றனர். ஒரு மாவட்டத்தில் உள்ள அரசு ஐ.டி.ஐ.களில் உள்ள இடங்கள் மற்றும் தனியார் ஐ.டி.ஐகளில் உள்ள 50% அரசு ஒதுக்கீட்டு இடங்கள் ஆகியவை அம்மாவட்டத்தில் உள்ள ஒரு அரசு ஐ.டி.ஐயில் நடத்தப்படும் மாவட்டக் கலந்தாய்வு மூலம் நிரப்பப்படுகின்றன. தமிழகத்தில் உள்ள 32 மாவட்டங்களிலும் தற்போது கலந்தாய்வு நடைபெற்று வருகிறது.

சென்னை மாவட்டத்தில் உள்ள வடசென்னை அரசு தொழிற் பயிற்சி நிலைய வளாகத்தில் இன்று 11.07.2016 நடைபெற்ற மாவட்ட காலந்தாய்வு சேர்க்கையை மாண்புமிகு தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திருமதி. நீலோபர் கபில் அவர்கள் மேற்பார்வையிட்டு மாணவர்களுக்கான சேர்க்கை ஆணையினை வழங்கி பின்வருமாறு தெரிவித்தார்.

தமிழகத்தில் பொருளாதாரத்தில் பின்தங்கிய ஏழை எளிய குடும்பத்தைச் சார்ந்த மாணவ மாணவியர் தங்களின் வாழ்வாதாரத்தைப் பெருக்கிக்கொள்ளவும், மாநிலத்தின் தொழிற் திறன் பெற்ற மனித வளத் தேவையை பூர்த்தி செய்யவும் தொழிற் பயிற்சி நிலையங்கள் பெரும்பங்கு வகிக்கின்றன.

மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அம்மா அவர்களின் உத்தரவிற்கிணங்க, தமிழகத்தில் கடந்த ஐந்தாண்டுகளில் மட்டும் 23 புதிய அரசு தொழிற் பயிற்சி நிலையங்கள் தொடங்கப்பட்டு உள்ளன. அரசு மற்றும் தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் மாணவர்கள் மாவட்ட கலந்தாய்வு மூலம் இன சுழற்சி மற்றும் மதிப்பெண் அடிப்படையில் சேர்க்கை செய்யப்படுகின்றனர். மாணவர்கள் தங்களது விண்ணப்பங்களை இணையதளத்தில் பதிவேற்றம் செய்ய ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. மாணவர்கள் கலந்தாய்வில் தங்களுக்கு விருப்பமான தொழிற் பிரிவு மற்றும் விருப்பமான ஐ.டி.ஐ.யை தேர்ந்தெடுக்கவும் வழிவகை செய்யப்பட்டுள்ளது.

அரசு தொழிற் பயிற்சி நிலையங்களில் சேரும் மாணவர்களுக்கு கட்டணமின்றி பயிற்சிகள் வழங்கப்பட்டு வருகின்றன. மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க அரசு மற்றும் அரசு உதவி பெறும் தொழிற் பயிற்சி நிலையங்களில் சேரும் மாணவர்களுக்கு கீழ்க்காணும் சலுகைகள் அரசால் வழங்கப்பட்டு வருகிறது.

1. உதவித்தொகை மாதம் ரூ.500/–
2. பேருந்து கட்டணச் சலுகை
3. மிதிவண்டி
4. மடிக்கணினி
5. பாடபுத்தகங்கள் மற்றும் வரைபட கருவிகள்
6. 2 செட் சீருடைகள் மற்றும்
7. 1 செட் காலணிகள்(ஷு)

மேலும் மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சரின் ஆணைக்கிணங்க தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் அரசு ஒதுக்கீட்டின்கீழ் சேரும் மாணவர்களுக்கு பயிற்சிக் கட்டணத்தை அரசே வழங்குகிறது. மாநகராட்சி மற்றும் நகராட்சி பகுதியில் உள்ள தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு ஒரு வருடத்திற்கு ரூ.12,000/– மும், கிராமப் புறத்தில் உள்ள தனியார் தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிலும் மாணவர்களுக்கு ஒரு வருடத்திற்கு ரூ.10,000/– மும் பயிற்சிக் கட்டணமாக அரசு வழங்குகிறது.

இத்தொழிற் பயிற்சி நிலையங்களில் பயிற்சி பெற்று தேர்ச்சி பெறுவோருக்கு உள்நாடு மற்றும் வெளிநாடுகளில் அரசு மற்றும் தனியார் துறைகளில் வேலைவாய்ப்புகள் எளிதில் கிடைக்கிறது. உலக அளவில் திறன்மிக்க தொழிலாளர்கள் பற்றாக்குறையாக உள்ளதால் இவ்வாறான தொழிற் பயிற்சி பெறுவோருக்கு வேலைவாய்ப்பு அதிக அளவில் உள்ளது. இந்த அரிய வாய்ப்பினை பொதுமக்கள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென கேட்டுக்கொள்ளப்படுகிறது.

இந்நிகழ்ச்சியின்போது தொழிலாளர் மற்றும் வேலைவாய்ப்புத்துறை செயலாளர் திருமதி. பி.அமுதா, இ.ஆ.ப., வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை இயக்குநர் திரு. சி. சமயமூர்த்தி, இ.ஆ.ப. மற்றும் துறையின் உயர் அலுவலர்கள் உடன் இருந்தனர்.

இயக்குநர்,
வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத் துறை, சென்னை–9**